# தொழிலாளர் சட்டத்தொகுப்புகளின் மாநில விதிகள் தொடர்பான தொழிற்சங்கங்கள் மற்றும் வேலையளிப்போர் அமைப்புகளுடனான கலந்தாய்வு கூட்டம்

"மத்திய அரசு 29 தொழிலாளர் சட்டங்களை உள்ளடக்கிய ஊதியச் சட்டத் தொகுப்பு, 2019, தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு, 2020, சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு, 2020 மற்றும் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு, 2020 ஆகிய நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளாக ஒருங்கிணைத்துள்ளது.

மத்திய அரசு, இந்த நான்கு சட்டத் தொகுப்புகளின் கீழான மத்திய விதிகளை 08.05.2026 அன்று உறுதி செய்து அரசிதழில் வெளியிட்டுள்ளது.

மேற்காணும் சட்டத்தொகுப்புகளின் சில பிரிவுகளின் கீழ் விதிகளை இயற்ற மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஊதியச் சட்டத்தொகுப்பு (தமிழ்நாடு) விதிகள், 2022, தொழில் உறவுகள் (தமிழ்நாடு) விதிகள், 2022 மற்றும் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் (தமிழ்நாடு) விதிகள், 2022 ஆகிய மூன்று வரைவு மாநில விதிகள் 11.04.2022 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

அவ்வாறு வெளியிடப்பட்ட வரைவு விதிகளுக்கு தொழிற்சங்கங்கள் மற்றும் வேலை அளிப்போரிடமிருந்து பெறப்பட்ட, ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டும் திருத்தப்பட்ட மத்திய விதிகளுக்கு ஏற்றவாறும் மாநில வரைவு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொழிலாளர் சட்டத்தொகுப்புகளுக்கான மாநில வரைவு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுதல் தொடர்பாக தொழிற்சங்கங்கள் மற்றும் வேலை அளிப்போர் அமைப்புகளுடன் கீழ்காணும் நாள்களில் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

| வ. எண் | சட்டத்தொகுப்பு | கூட்டம் நடைபெறும் நாள் | தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு கூட்டம் நடைபெறும் நேரம் | வேலையளிப்போர் அமைப்புகளுக்கு கூட்டம் நடைபெறும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | ஊதிய சட்டத்தொகுப்பு (தமிழ்நாடு) விதிகள் | 16.09.2026 | முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை | பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை |
| 2. | தொழில் உறவுகள் (தமிழ்நாடு) விதிகள் | 17.09.2026 | | |
| 3. | தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் (தமிழ்நாடு) விதிகள் | 18.09.2026 | | |

மேற்படி, கூட்டத்தில் பங்கேற்பவர்கள் தங்களது ஆலோசனைகளை எழுத்து பூர்வமாக மின்னஞ்சல் (colcode.objsug@gmail.com) மூலம் 23.09.2026 மாலை 5.45 மணிக்குள் தெரிவிக்க வேண்டுமெனவும், மேற்குறிப்பிட்ட தேதிக்குள் வழங்கும் ஆலோசனைகள் மட்டுமே பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது."

தொழிலாளர் ஆணையர்